மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
முன்னிலை: திரு.S.அன்புதாசன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை , ஆத்தூர்
2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 22-ம் நாள் திங்கள்கிழமை
STC- 562/2024

C.N.R.No: TNDG18-002916-2024

திரு. R.வேளாங்கண்ணி ஆரோக்கியம் ... புகார்தாரர்

//எதிர்//

திருமதி. M.உமாதேவி ... எதிரி

வழக்கின் சுருக்கம்

வ.எண்.	விவரம்	
1.	இருதரப்பினர்களின் பெயர்கள்	
	புகார்தாரர்: திரு. R.வேளாங்கண்ணி ஆரோக்கியம்(60/2024), த/பெ. ராபர்ட், கதவு எண். 181/2, R.C பள்ளி தெரு, கரிசல்பட்டி, திண்டுக்கல் மேற்கு தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.	எதிரி: திருமதி. M.உமாதேவி(45/24) க/பெ. முருகன், "அஸ்விதா பிரைடல்ஸ்", கதவு எண். 22 AC 2வது குறுக்கு தெரு, நலம் மருத்துவமனை எதிரில், மெங்கில்ஸ் ரோடு, திண்டுக்கல் .
2.	எதிரியின் வயது	45/24
3.	தந்தை/கணவர் பெயர்	முருகன்
4.	மதம்	--
5.	தொழில்	--
6.	முகவரி	"அஸ்விதா பிரைடல்ஸ்", கதவு எண். 22 AC

		2வது குறுக்கு தெரு, நலம் மருத்துவமனை எதிரில், மெங்கில்ஸ் ரோடு, திண்டுக்கல் .
7.	தாலுகா	--
8.	சம்பவம் நிகழ்ந்த நாள்	--
9.	கைது	--
10.	பிணையில் விடுவித்தல்	--
11.	எதிரி சிறையில் இருந்த நாட்கள்	--
12.	புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்	23.07.2024
13.	கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி	26.07.2024
14.	அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட நகல்	--
15.	கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்	--
16.	விசாரணை துவக்கம்	14.11.2025
17.	சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்	--
18.	விசாரணை முடிவு	29.01.2026
19.	குவி.மு.ச. பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்	29.01.2026

****

இவ்வழக்கானது கடந்த 26.07.2024 ம் தேதி **STC- 562/2024** என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 29.01.2026-ம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கதிர்வேல்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும்,

குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.நிதிஸ்.,B.A.,L.L.B., அவர்கள் ஆஜராகியும் பின்னிட்டு தொடர்ந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக ஆஜராகி வாதிடவில்லை, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

<u>தீர்ப்புரை</u>

1) இவ்வழக்கான புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142–ன் படி தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) **<u>மனுவின் சுருக்கம்:</u>**

2.1) புகார்தாரரும், குற்றஞ்சாட்டப்பட்டவரும் நன்கு அறிமுகமானவர்கள் மற்றும் குடும்ப நண்பர்கள். அதனடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது குடும்பச் செலவிற்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் அவசர நிமித்தமாக கடனாக ரூபாய் ரூ.20,00,000/– (ரூபாய் இருபது லட்சம் மட்டும்) கேட்க, புகார்தாரரும் அதற்கு ஒப்புக்கொண்டு, மேற்படி தொகையை புகார்தாரரின் வீட்டில் வைத்து கடந்த 15.03.2024–ம் அன்று குற்றஞ்சாட்டப்பட்டவர் ரொக்கமாக பெற்றுக் கொண்டார். அன்றைய தினமே மேற்படி கடன் தொகையை தீர்க்கும் பொருட்டு எதிரியானவர் தனது வங்கி கணக்குள்ள Dindigul, Canara Bank, SPCL MIC FIN கிளை காசோலை எண்.736744–ஐ ரூ.20,00,000/–க்கு 18.04.2024ம் தேதியிட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது கையொப்பமிட்டு, புகார்தாரர் பெயருக்கு கொடுத்து,

மேற்படி தேதியில் காசோலையை வசூலுக்கு செலுத்தும் போது எதிரியின் கணக்கில் பணம் இருக்கும் என உறுதி அளித்தார்.

2.2) மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவரின் உறுதிமொழியை நம்பி, மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கி கணக்குள்ள Indian Overseas Bank, Dharumathupatti கிளையில் 02.05.2024ம் தேதியன்று காசோலையை வசூலுக்கு செலுத்தினார், ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) என்ற குறிப்புடன் காசோலையானது கடந்த 03.05.2024ம் தேதியன்று திருப்பப்பட்டு விட்டது. காசோலை திருப்பப்பட்ட விபரம் கடந்த 07.05.2024ம் தேதியன்று புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

2.3) குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தே புகார்தாரருக்கு மேற்படி காசோலை கொடுத்துள்ளார். அதன் பிறகு புகார்தாரர் குற்றஞ்சாட்டப்பட்டவரை சந்தித்து காசோலை திருப்பட்ட விவரத்தினையும், காசோலைக்குரிய தொகையை செலுத்தி வைக்க கோரியும் கேட்டதில், குற்றஞ்சாட்டப்பட்டவர் இதுநாள் வரை மேற்படி கடனுக்கான எந்த தொகையையும் செலுத்தி வைக்கவில்லை. எனவே மேற்படி காசோலை திருப்பப்பட்ட விவரத்தினையும், காசோலைக்குரிய தொகையை 15 நாட்களுக்குள் திருப்பி செலுத்தி வைக்கக்கோரியும் புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 06.06.2024ம் தேதியன்று குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அறிவிப்பு அனுப்பினார்.

2.4) அன்றைய தினம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீடு பூட்டப்பட்டிருந்ததால், அஞ்சல் துறை மூலம் தகவல் தரப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர் பெற்றுக்கொள்ளவில்லை. அதனால் "Door Locked" என்ற

குறிப்புடன் கடந்த 08.6.2024 அன்று பதிவு அஞ்சல் தபால் திருப்பி வந்து விட்டது.

2.5) குற்றஞ்சாட்டப்பட்டவரின் வங்கிக்கணக்கில் போதிய பணம் இல்லை (Funds Insufficient) என்று தெரிந்திருந்தும், குற்றஞ்சாட்டப்பட்டவர் புகார்தாரருக்கு மோசடியாக காசோலை வழங்கியிருப்பது சட்டத்திற்கு புறம்பான செயலாகும் என்றும்,

2.6) எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவரின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச் சட்டம் 138 மற்றும் 142–ன் கீழ் தண்டிக்கதக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய கடன் தொகையை குற்றஞ்சாட்டப்பட்டவர் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டும் என்று இந்த தனி நபர் குற்றமுறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு 14.11.2025–ல் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து அன்றைய தினமே குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் கேள்விகள் கேட்டு அவர் அதை மறுத்துள்ளார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) <u>**புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u>

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் R.வேளாங்கண்ணி ஆரோக்கியம் பு.த.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, பு.த.சா.1–ன் மூலமாக பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சரண்யா

(தருமத்துப்பட்டி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மேலாளர்) என்பவரை பு.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, பு.த.சா.2–ன் மூலமாக பு.த.சா.ஆ.5 மற்றும் பு.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. புகார்தாரர் தரப்பில் வாய்ப்பளித்தும் கூடுதல் சாட்சி யாரையும் விசாரிக்கவில்லை.

5) புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ள சாட்சியங்களை தொகுத்து 29.01.2026ம் தேதி குவிமுச பிரிவு 313(1)(b)–ன் கீழ் வினவியபோது, புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சி என்றும், புகார்தாரரை யார் என்று எனக்கு தெரியாது என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறியதால், அவரது தரப்பு சாட்சியம் இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது.

6) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

6.1) இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

6.2) மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

7) <u>தீர்வும் அதன் காரணமும்</u>

6.1) இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

இவ்வழக்கின் காசோலை தேதி 18.04.2021 என்று பு.த.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் காசோலை குற்றஞ்சாட்டப்பட்டவர் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று 03.05.2024–ல் திருப்பப்பட்டது என்று பு.த.சா.ஆ–2 ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது. 03.05.2024–ல் திருப்பப்பட்ட வங்கி Return Memo–வை இந்த புகார்தாரர் 08.05.2024ம் தேதி தான் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டுள்ளார் என்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தருமத்துப்பட்டி கிளையின் வங்கி மேலாளர் பு.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது வங்கியில் பராமரிக்கப்படும் பதிவேட்டை பு.த.சா.ஆ–5 ஆக குறியீடு செய்துள்ளார். பு.த.சா.ஆ.5–ஐ பார்க்கும்போது, 08.05.2024–ம் தேதி தான் இந்த வழக்கு காசோலையை புகார்தாரர் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டுள்ளார் என்று தெரியவருகிறது. 08.05.2024–ம் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் புகார்தாரர் தன்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்ப வேண்டும். 06.06.2024–ம் தேதியில் ஒரு மாத காலத்திற்குள் புகார்தாரர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின்படி சட்ட அறிவிப்பை வழக்கறிஞர் மூலம் அனுப்பி உள்ளார் என்று தெரிய வருகிறது. இதன் முலம் பிரிவு.138(b) (the payee or the holder in due course of the cheque, as the case may be, makes a demand or the payment of the said amount of money by giving a notice in writing, to the drawer of the cheque,(**within thirty days of the receipt of information by him for the bank regarding the return of the cheque as unpaid**)) மாற்றுமுறை ஆவணசட்டத்தின்படி, வங்கியிலிருந்து Return Memo–வை பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் புகார்தாரர் தன்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளார்.

எனவே, மேற்படி பொருண்மையை பொறுத்து, புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்த முன்தீர்ப்புகளான **2019 SCC Online Bombay 12065 என்ற**

முன்தீர்ப்பும், 2001 6 Supreme court cases 582 என்ற முன்தீர்ப்பும் மேற்படி பொருண்மையை பொறுத்து மட்டும் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. 06.06.2024–ம் தேதி அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை 07.06.2024, 08.06.2024 ஆகிய தேதிகளில் Intimation குற்றம்சாட்டப்பட்டவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவர் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை வாங்காததால், திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சலக உறையுடனும், அஞ்சலக ஒப்புதல் அட்டையுடனும் கூடிய வழக்கறிஞர் அறிவிப்பு பு.த.சா.ஆ.4 ஆக புகார்தாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.4 திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை 15.06.2024 அன்று புகார்தாரர் தரப்பில் பெறப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு, 45 நாட்களுக்குள் 23.07.2024 அன்று உரிய சட்டகாலத்திற்குள் இந்த தனிநபர் குற்றமுறையீட்டு மனுவானது புகார்தாரரால் பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் சொல்லப்பட்டுள்ள காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

குற்றம்சாட்டப்பட்டவர் அனுப்பிய பதில் அறிவிப்பை மறுத்து புகார்தாரர் தரப்பில் அறிவிப்பு அனுப்பவில்லை. எனவே, குற்றம்சாட்டப்பட்டவர் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை புகார்தாரர் ஒப்புக்கொண்டுள்ளார் என்று அனுமானிக்க வேண்டும் என்று குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு வழக்கறிஞர் கூறியுள்ள வாதம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. ஏனெனில், பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி, வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக புகார்தாரர் தான் கட்டாயம் அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று மாற்றுமுறை ஆவணச்சட்டம் கட்டாயமாக கூறுகிறது. குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கட்டாயம் அனுப்ப

வேண்டும் என்று மாற்றுமுறை ஆவணச்சட்டம் குற்றம்சாட்டப்பட்டவரை கட்டாயபடுத்தவில்லை.

புகார்தாரர் தன்னுடைய தனிநபர் குற்றமுறையீட்டு மனுவில், நானும் எதிரியும் நன்கு அறிமுகமானவர்கள் மற்றும் குடும்ப நண்பர்கள் என்று கூறியுள்ளார். ஆனால், இந்த வழக்கிற்கு முன்பு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் புகார்தாரரும், குற்றம்சாட்டப்பட்டவரும் நன்கு அறிமுகமானவர்கள் என்றும், குடும்ப நண்பர்கள் என்றும் குறிப்பிட்டு கூறவில்லை. ரூ.20,00,000/-ஐ கடனாக கொடுக்கும் அளவிற்கு தனக்கும், குற்றம்சாட்டப்பட்டவருக்கும் என்ன விதமான உறவு இருந்தது என்பதை புகார்தாரர் தன்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டு கூறவில்லை.

மேலும், புகார்தாரரை குற்றம்சாட்டப்பட்டவர் குறுக்கு விசாரணை செய்யும்போது,

இவ்வழக்கின் எதிரியை உங்களுக்கு எத்தனை வருடங்கள் தெரியும் என்று மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. ஆனால் 10 வருடங்களாக தெரியும். வழக்கறிஞர் அறிவிப்பில் எத்தனை வருடங்களாக தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், தன்னுடைய வழக்கிலும், நிரூபணவாக்குமூலத்திலும் நண்பர் என்று கூறியுள்ள நிலையில்,

புகார்தாரருக்கு குற்றம்சாட்டப்பட்டவரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்று குறிப்பிட்டு கூறாததால் புகார்தாரரின் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், புகார்தாரர் தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

எதிரியின் பிள்ளைகளின் பெயர் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

எதிரியின் அம்மாவின் பெயர் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் அப்பாவின் பெயர் மட்டும் தெரியும் என்று கூறியுள்ளார்.

அவரின் அப்பாவின் பெயரையும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. புகார்தாரர் குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளது போல, புகார்தாரருக்கு குற்றம்சாட்டப்பட்டவரை 10 வருடங்களாக தெரியும் எனும்போதும், நன்கு அறிமுகமானவர் என்றும், குடும்ப நண்பர்கள் என்றும் கூறியுள்ள நிலையில், குற்றம்சாட்டப்பட்டவருக்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்தும், அவரின் அம்மா பெயர் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்தும், அப்பாவின் பெயர் தெரியும் என்று சாட்சியம் அளித்துவிட்டு, அவர் பெயரை குறிப்பிட்டு கூறாத நிலையிலும், புகார்தாரருக்கு குற்றம்சாட்டப்பட்டவர் நன்கு அறிமுகமானவர் என்றும், குடும்ப நண்பர்கள் என்றும், தன்னுடைய வழக்கிலும், நிரூபணவாக்குமூலத்திலும் கூறியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்க வகையிலும், நம்பதகுந்த விதத்திலும் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

புகார்தாரரும், குற்றம்சாட்டப்பட்டவரும் நன்கு அறிமுகமானவர்கள் மற்றும் குடும்ப நண்பர்கள் என்று வழக்கில் கூறியுள்ள சங்கதியை புகார்தாரர் தரப்பில் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்க வகையிலும், நம்பதகுந்த வகையிலும் நிரூபிக்கவில்லை என்பதால் புகார்தாரரின் வழக்கு இருநபர்களுக்கிடையே உள்ள உறவுமுறையை பற்றி நிரூபிக்காததால், புகார்தாரரின் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

புகார்தாரர் தன்னுடைய வழக்கில், குற்றம்சாட்டப்பட்டவர் சில்லறை கடன்களை தீர்ப்பதற்காகவும், அவசர நிமித்தமாக கடனாக ரூ.20,00,000/- கேட்க,

அதற்கு நானும் ஒப்புக்கொண்டு, மேற்படி தொகையை ரொக்கமாக எனது வீட்டில் வைத்து 15.03.2024 அன்று எதிரி பெற்றுக்கொண்டார் என்று கூறியுள்ளார். புகார்தாரரும், குற்றம்சாட்டப்பட்டவரும் குடும்ப நண்பர்களாக இருக்கும் சூழ்நிலையில், என்ன விதமான குடும்ப செலவிற்காக பணம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு தேவைப்பட்டது என்றும், என்னவிதமான அவசர நிமித்தமான கடன் என்றும், குற்றம்சாட்டப்பட்டவர் யாரிடம் சில்லறை கடனை பெற்றிருந்தார் என்றும், புகார்தாரருக்கு தெரிய வந்திருக்கக்கூடும்.

புகார்தாரர் தன்னுடைய மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் குற்றம்சாட்டப்பட்டவர் தனது குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும், அவசர நிமித்தமான கடனுக்காகவும் ரூ.20,00,000/- கடன் பெற்றார் என்று மட்டுமே கூறியுள்ள நிலையில், புகார்தாரரும் குற்றம்சாட்டப்பட்டவரும் நன்கு அறிமுகமானவர்கள், குடும்ப நண்பர்கள் என்று புகாரில் கூறியுள்ளது நம்பதகுந்த வகையிலும், ஏற்றுக்கொள்ளதக்க வகையிலும் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

புகார்தாரர் தன்னுடைய மனுவில், 15.3.2024 அன்று குற்றம்சாட்டப்பட்டவர் தன்னிடம் வந்து ரூ.20,00,000/-ஐ குடும்ப செலவிற்காகவும், சில்லரைக் கடனை தீர்ப்பதற்காகவும், அவசர நிமித்தமான கடனுக்காகவும் பெற்றுச்சென்றார் என்று மட்டுமே கூறியுள்ள நிலையில், ரூ.20,00,000/- கடனாக கேட்க வேண்டும் எனில் 15.03.2024-ம் தேதிக்கு முன்பாக எந்த தேதியில் பணம் தனக்கு வேண்டும் என்று குற்றம்சாட்டப்பட்டவர் கேட்டார் என்ற விபரத்தை புகார்தாரர் தரப்பில் வழக்கிலும், நிரூபணவாக்குமூலத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை.

மேலும், குற்றம்சாட்டப்பட்டவர் பணம் கேட்ட தேதியான 15.03.2024-ம் தேதியன்றே புகார்தாரர் பணத்தை உடனடியாக குற்றம்சாட்டப்பட்டவருக்கு கடனாக கொடுத்து விட்டார் என்று சொல்லியுள்ள நிலையில், ரூ.20,00,000/- கொடுக்கும் அளவிற்கு புகார்தாரருக்கு என்ன பண வசதி இருந்தது என்பதை பார்க்கும்போது,

புகார்தாரர் தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

நீங்கள் என்ன வேலை செய்கீறிர்கள் என்றால் விவசாயம் மற்றும் ஆடு, மாடு வைத்துள்ளேன். உங்கள் மாத வருமானம் தோராயமாக என்ன என்றால் ரூ.70,000/- வருமானம் வரும். செலவுகள் போக ரூ.40,000/- வருமானம் மிஞ்சும். மொத்தம் எத்தனை வங்கி கணக்குகள் வைத்துள்ளீர்கள் என்றால் மொத்தம் 3 வங்கிகணக்குகள் வைத்துள்ளேன். தருமத்துப்பட்டி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் எவ்வளவு பணம் தோராயமாக நீங்கள் வைத்திருந்திர்கள் என்றால் கணக்கு தொடங்கும்போது ரூ.1000/- போட்டுவைத்திருந்தேன். எதிரி உங்களிடம் பணம் கேட்கும்போது, உங்களின் வங்கி கணக்கில் இருந்து தான் பணத்தை எடுத்து கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பம் பெரிய குடும்பம் என்பதால் எப்பொழுதுமே வீட்டில் ரூ.10,00,000/- பணமாக இருந்து கொண்டே இருக்கும். நீங்கள் வருமானவரி செலுத்துபவரா என்றால் இல்லை.

மேற்சொன்ன பு.த.சா.1-ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை பார்க்கும்போது, எதிரி கேட்ட இந்த காசோலை தொகையை புகார்தாரரின் வங்கிகணக்கில் இருந்து எடுத்துக்கொடுக்கவில்லை என்று தெரிய வருகிறது. அதேபோல், ரூ.10,00,000/-ஐ புகார்தாரர் எப்பொழுதும் பணமாக வீட்டில் வைத்திருப்போம் என்று சொல்வது ஏற்றுக்கொள்ளதக்க வகையிலும், நம்பதகுந்த வகையிலும் இல்லை. ஏனெனில், எந்த ஒரு சாதாரண நபரும் ரூ.10,00,000/-ஐ எப்பொழுதுமே வீட்டில் வைத்திருப்போம் என்று சொல்வது Ordinary Prudent man

எவராலும் மேற்சொன்ன சங்கதி நம்பக்கூடிய விதத்தில் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

புகார்தாரர் வழக்குபடி வைத்துக்கொண்டால் கூட, 15.03.2024– அன்றே மீதமுள்ள ரூ.10,00,000/–ஐ எந்த பணத்தை வைத்து குற்றம்சாட்டப்பட்டவருக்கு கொடுத்தார் என்பதற்கு தகுந்த ஆதாரங்களை இந்நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யவில்லை.

தருமத்துப்பட்டி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி புகார்தாரரின் வங்கி வங்கி மேலாளரான பு.த.சா.2 தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

வேளாங்கண்ணி ஆரோக்கியம் எத்தனை ஆண்டுகளாக உங்களது வங்கியில் கணக்கு வைத்துள்ளார் என்றால் 8,9 ஆண்டுகளாக சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கில் அதிகபட்ச இருப்புத்தொகை எவ்வளவு என்றால் பெரிய தொகையே அவரது வங்கிகணக்கில் பரிவர்த்தனை செய்ததில்லை. இந்த வழக்கு காசோலை தாக்கல் செய்த ஆறு மாதத்திற்கு முன்பும், ஆறு மாதத்திற்கு பின்பும் அவருடைய வங்கிகணக்கில் அதிகபட்ச இருப்புத்தொகை எவ்வளவு என்றால், ரூ.1000/–க்கும் குறைவாக தான் இருக்கும்.

என்று சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரர் தனக்கு மூன்று வங்கிகணக்கு உள்ளதாக சொல்லியுள்ள நிலையில், மீதமுள்ள இரண்டு வங்கிகணக்கு எங்கு உள்ளது என்றும், அந்த வங்கிகணக்கின் இருப்புத்தொகை குறித்தும் புகார்தாரர் தரப்பில் சாட்சியம் அளிக்கவில்லை.

புகார்தாரர் ரூ.20,00,000/–ஐ தன்னுடைய வங்கி கணக்கில் இருந்து எடுத்துக்கொடுக்கவில்லை என்று கூறியுள்ள நிலையில், 15.03.2024–ம்

தேதியில் குற்றம்சாட்டப்பட்டவர் ரூ.20,00,000/—தனக்கு வேண்டும் என்று கேட்ட உடனேயே அந்த தேதியிலேயே மொத்த பணத்தையும் குற்றம்சாட்டப்பட்டவருக்கு கடனாக கொடுப்பதற்கு தனக்கு என்ன என்ன பண வசதிகள் இருந்தது என்றும், ரூ.20,00,000/— கொடுக்கும் அளவிற்கு அன்றைய தேதியிலேயே புகார்தாரரால் எவ்வாறு முடிந்தது என்பதற்கு புகார்தாரர் தரப்பில் பண வசதி குறித்து எந்த சாட்சியத்தையும் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இந்நீதிமன்றத்தின் முன்பு சான்றாவணமாக குறியீடு செய்யவில்லை. பணத்தை கொடுக்கும்போது இருந்த சாட்சிகள் யார் யார் என்பது பற்றியும் கூறவில்லை.

குற்றம்சாட்டப்பட்டவர் 10 வருடங்களாக குடும்ப நண்பர் என்று சொல்லியுள்ள நிலையில், புகார்தாரர் தன்னுடைய குறுக்கு விசாரணையில், குற்றம்சாட்டப்பட்டவரின் வீட்டின் வாசப்படி எந்த திசை என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம்அளித்துள்ளதும். இந்த வழக்கு காசோலையை யார் எழுதினார்கள் என்று மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்தும், ரூ.20,00,000/—ஐ புகார்தாரர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு கேட்ட தேதியிலேயே உடனடியாக கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில், அந்த பணத்திற்கு பிணையமாக காசோலையை தவிர இரு ஆவணங்கள் எதையும் குற்றம்சாட்டப்பட்டவரிடம் இருந்து எழுதியோ, கேட்டோ பெறவில்லை என்ற சூழ்நிலையிலும், புகார்தாரர் தனக்கு வருமானம் ரூ.40,000/— வரும் என்று சொல்லியுள்ளது தோராயமான வருமானம் மட்டுமே அதற்கு எந்த ஆவண சாட்சியங்களையும் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் புகார்தாரர் தரப்பில் சமர்ப்பிக்காதபோதும், புகார்தாரரின் கூற்றுப்படியே ரூ.40,000/— வருமானம் வரும் என்றாலும் கூட, எந்த தேதியிலிருந்து அவர் சேமித்து

வைத்திருந்தார், சேமித்து வைத்திருந்த பணத்தை கொடுத்தார் என்று குறிப்பிட்டு சாட்சி அளிக்கவில்லை.

இருப்பினும், ரூ.20,00,000/- பணத்தை வங்கி கணக்கிலிருந்து எடுக்காமல் வேறு நபர்களிடமிருந்து கடன் பெறாமல், தன்னிச்சையாக புகார்தாரர் காசோலை தொகையான ரூ.20,00,000/- குற்றம்சாட்டப்பட்டவருக்கு கடனாக கொடுத்துள்ளார் என்று கூறியுள்ளது இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்க வகையிலும், நம்பதகுந்த வகையிலும் இல்லை என்று **மாண்புமிகு சென்னை உச்சநீதிமன்றம் முன்தீர்ப்பான (K. Ilayarajalingam VS K. Karthikeyan என்ற வழக்கின் 10வது பத்தியில், The Complainant admits that he not receive any other document as proof for advancing loan of Rs.9 Lakhs except the subject cheque** மேலும், **It suggested in the cross examination of PW1 that he has no source of income to advance loan of Rs.9 lakhs and that is the reason why he has not produce any document to prove his income** என்று கூறப்பட்டுள்ளது மற்றும் பத்தி.11-ல் **That complainant admits that he did not receive any other document for advancing loan of Rs.9 lakhs, except the post dated cheque given to him. மற்றும்** பத்தி 13-ல் **Taking into consideration his background admittedly a small time farmer holding 6 acres of land and not even a bank savings account claiming he advanced loan of Rs.9 lakhs as against the post dated cheque and no other document obtained for the money transaction is obviously bound to be suspected.** என்று கூறப்பட்டுள்ளது)மேற்சொன்ன முன்தீர்ப்பின் அடிப்படையில் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேலும், புகார்தாரருக்கு முதலில் காசோலை தொகைக்குரிய பண வசதியை மெய்ப்பிக்க வேண்டிய சுமை இல்லை என்றாலும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் புகார்தாரரின் பண வசதியை குறித்து கேள்வி

எழுப்பும்போது, புகார்தாரர் காசோலை தொகையை கொடுக்கும் அளவிற்கு தனக்கு போதிய பண வசதி இருந்தது என்பதை கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவராவார். அந்த விதத்தில், புகார்தாரரின் தரப்பில் சமர்ப்பித்த மாண்புமிகு பஞ்சாப் மற்றும் ஹரியானா முன்தீர்ப்பான **Sh. Narayan Singh Yadav Vs Sh. Ram Singh Dt. 22.11.2024 (if the accused challenges the financial capacity of the complainant, the complainant must prove the financial capacity and source of income) என்று** கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கிலும் குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரின் காசோலை தொகைக்கான பண வசதி குறித்து குறுக்கு விசாரணையில் கேள்விகளை கேட்டு புகார்தாரரின் வழக்கை முரண்படுத்தியுள்ள நிலையில், புகார்தாரர் காசோலையின் முழு தொகைக்குரிய பணத்தை கொடுக்கும் அளவிற்கு தனக்கு போதிய பண வசதி இருந்தது என்பதை இந்த வழக்கில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

பிரிவு.118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான சட்டப்படியான அனுமானமானது, குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரின் வழக்கை சட்டத்திற்குட்பட்டு முரண்படுத்தாதபோது தான் புகார்தாரருக்கு சாதகமாக எடுத்துக்கொள்ளப்படும். பிரிவு.118 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தை பார்க்கும்போது, **Untill the Contrary is proved the following presumptions shall be made:–......................etc..** என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, இந்த வழக்கில் புகார்தாரரின் வழக்கை குற்றம்சாட்டப்பட்டவர் சட்டத்திற்குட்பட்டு முரண்படுத்தியுள்ளதால், புகார்தாரரின்

தரப்பில் சமர்ப்பித்த முன்தீர்ப்பான **2024(1) MWN (Cr.) DCC 49 (SC)** என்ற முன்தீர்ப்பும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்புகளான **2025(1)TLNJ 398 (Criminal), 2025(1) MWN (Cr.) DCC 168(Mad.), 2024(1) MWN (Cr.) DCC 159 (Mad.)** என்ற முன்தீர்ப்பும், **2025(1) MWN(Cr.) DCC 172(Madras)** மேற்படி முன்தீர்ப்புகள் இவ்வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்தக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஏனெனில், குற்றம்சாட்டப்பட்டவர் தன்னுடைய வழக்கை **Beyond all reasonable doubt** என்ற விதத்தில் நிரூபிக்க வேண்டியதில்லை, **Preponderence of probabilities** என்ற விதத்தில் நிரூபித்தாலே போதுமானது என்று மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பான **Basalingappa Vs Mudibasappa Dated.09.04.2019–ல்** கூறப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்ன உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின்படி இவ்வழக்கின் குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரின் வழக்கை **Preponderence of Probabilities** என்ற விதத்தில் புகார்தாரரின் வழக்கை சட்டப்படி முரண்படுத்தியுள்ளார் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் எழுத்துமூலமான வாதவுரையுடன் சமர்ப்பித்த புகார்தாரரின் பண வசதியை குற்றம்சாட்டப்பட்டவர் கேள்வி எழுப்பும்போது புகார்தாரர் காசோலை தொகை கொடுக்கும் அளவிற்கு தனக்கு போதிய பண வசதி இருந்தது என்று நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், அவ்வாறு இந்த வழக்கில் புகார்தாரர் காசோலை தொகையான ரூ.20,00,000/–ஐ கொடுப்பதற்கு தனக்கு போதிய பண வசதி இருந்தது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி தகுந்த ஆவணங்களுடன் நிரூபிக்கவில்லை என்று குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரின் வழக்கை சட்டப்படி முரண்படுத்தியுள்ளார் என்ற குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் ஏற்றுகொள்ளதக்க வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனவே, இவ்வழக்கு காசோலை தொகையான ரூ.20,00,000/-ஐ குற்றம்சாட்டப்பட்டவருக்கு கொடுக்கும் அளவிற்கு காசோலை தொகை கொடுத்ததாக சொல்லும் 15.03.2024-ம் தேதியில் புகார்தாரருக்கு போதிய பண வசதி(Source of Income) இருந்தது என்பதை நிரூபிக்கும் வகையில் புகார்தாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் புகார்தாரர் தனது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரின் வழக்கை சட்டப்படி முரண்படுத்தியுள்ளாரா என இந்நீதிமன்றம் பார்க்கும்போது,

புகார்தாரர் தன்னுடைய வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும், புகார்தாரர் குறுக்கு விசாரணையிலும் கூறியுள்ள பொருண்மைகள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்பதை குறுக்கு விசாரணையின் மூலம் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் முரண்படுத்தியுள்ளனர். மேலும், குற்றம்சாட்டப்பட்டவருக்கு காசோலை தொகையான ரூ.20,00,000/-ஐ கொடுத்ததாக சொல்லும் தேதியில் வங்கி கணக்கிலும், சேமிப்பிலும் போதிய பண வசதி புகார்தாரருக்கு இல்லை என்பதை குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்து, புகார்தாரரின் வழக்கை இந்நீதிமன்றம் நம்பதகுந்த வகையிலும், ஏற்றுக்கொள்ளதக்க வகையிலும் முரண்படுத்தியுள்ளார்.

எனவே, இவ்வழக்கின் புகார்தாரருக்கு காசோலை தொகையான ரூ.20,00,000/-ஐ கொடுக்க வேண்டிய சட்டப்படியான பொறுப்பும், கடமையும் குற்றம்சாட்டப்பட்டவருக்கு உள்ளது என்பதை புகார்தாரர் தன்னுடைய சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் இவ்வழக்கில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனவே, பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின்படி, இவ்வழக்கின் காசோலைத் தொகையான ரூ.20,00,000/- (ரூபாய் இருபது லட்சம்)-த்தை இவ்வழக்கின் புகார்தாரர் சட்டப்படியான பெறத்தக்க கடனாகவோ, அல்லது பொறுப்பாவோ இந்த குற்றம்சாட்டப்பட்டவரிடம் இருந்து சட்டப்படி வலியுறுத்தி பெற தகுதி உடையவர் அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, **இவ்வழக்கின் காசோலைத்தொகையான ரூ.20,00,000/- (ரூபாய் இருபது லட்சம் மட்டும்)-த்தை இவ்வழக்கின் புகார்தாரருக்கு இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் படி கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல** என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக,

இவ்வழக்கின் காசோலைத் தொகையானது, சட்டப்படி இவ்வழக்கின் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கது என்று சந்தேகத்திற்கு இடமின்றி புகார்தாரர் தரப்பில் நிரூபணம் செய்யாததால், இவ்வழக்கின் காசோலைத்தொகையான ரூ.20,00,000/- (ரூபாய் இருபது லட்சம் மட்டும்) ஆனது சட்டப்படி புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, நீதியின் நலன் கருதி, இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவரை **மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் படி குற்றவாளி இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 255(1) -ன் கீழ் விடுதலை செய்து,** இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 22-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது .

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.10 17:13:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஆத்தூர்.

<u>புகார்தாரர் தரப்பு சாட்சிகள் :</u>

பு.த.சா.1 – திரு. R.வேளாங்கண்ணி ஆரோக்கியம் (புகார்தாரர்)
பு.த.சா.2 – சரண்யா (மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தருமத்துப்பட்டி)

<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

பு.த.சா.ஆ.1	18.04.2024	திண்டுக்கல் டவுன், கனரா வங்கி, SPCL MIC FIN கிளை காசோலை – அசல்
பு.த.சா.ஆ.2	03.05.2024	எதிரியின் காசோலை Funds Insufficient என்ற குறிப்புடன் திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ – அசல்
பு.த.சா.ஆ.3	06.06.2024	புகார்தாரர் தன் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு ரசீதுடன் – அலுவலக நகல்
பு.த.சா.ஆ.4	08.06.2024	மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல் Door Locked என்ற குறிப்புடன் திரும்பி வந்த அஞ்சல் தபால் – அசல்
பு.த.சா.ஆ.5	--	இந்தியன் ஓவர்சீஸ் வங்கியால் பராமரிக்கப்படும் பேரட்டின் அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்
பு.த.சா.ஆ.6	03.05.2024 to 08.05.2024	வேளாங்கண்ணி ஆரோக்கியம் என்பவரின் வங்கி கணக்கு பட்டியலை 03.05.2024–ல் இருந்து 08.05.2024–ம் தேதி வரையிலான கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம்

<u>குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.10 17:13:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், ஆத்தூர்.